நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு

முன்னிலை: **திரு.து.ஹரிராம், பிகாம்,பி.எல்.,**
நீதித்துறை நடுவர், திருவையாறு
வாக்குமூலம்

**திருவையாறு நீதித்துறை நடுவர் நீதிமன்றம்**

வழக்கு எண்.**CC.216 / 2021**

வழக்கு சாட்சி- **அ.சா.3**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | சுப்ரமணி | : | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | முத்துசாமி | : | தொழில் | கூலி வேலை |
| கிராமம் | கடுவெளி | : | சமயம் | |
| தாலுக்கா | திருவையாறு | : | வயது | 46 /2023 |

(எதிரிகள் ஆஜர் )

**<u>நாள் : 18.07.2023</u>**

**முதல் விசாரணை:**

1) நான் கடுவெளியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1ஐ தெரியும். எதிரிகளுக்கும், அ.சா.1க்கும் என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியாது. நான் வீட்டில் தூங்கி பொண்டிருந்தேன். போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(சாட்சியை பிறழ் சாட்சியாக அரசு தரப்பில் பாவிக்க கோரி, அனுமதி கேட்கப்பட்டது, அனுமதி வழங்கப்பட்டு , நீதிமன்ற அனுமதியுடன் குறுக்கு விசாரணை)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

கடந்த 20.08.2018ஆம் தேதி இரவு 10.00 மணி அளவில் அ.சா.1 அவரது சொந்த ஊரான கடுவெளி கிராமத்திற்கு வந்தபோது ஆஜர் எதிரிகள் மறைந்திருந்து அவரை வழிமறித்து தகாத வார்த்தையால் திட்டினார்கள் என்றால் சரியல்ல. மேலும் உருட்டு கட்டையுடன் அவரை தாக்கி காயப்படுத்தினார்கள் என்றால் சரியல்ல. அதில்

அவருக்கு காதுக்கு அருகில் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. இந்த விபரம் எனக்கு

நேரடியாக தெரியும் என்று போலிஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானமாக சென்று, எதிரிகளுக்கு ஆதரவாகவும், அரசுதரப்பிற்கு எதிராகவும் பிறழ் சாட்சியாக மாறி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியல்ல.

மறு விசாரணை இல்லை

(ஒம்./-**திரு. து.ஹரிராம், பி.காம், பி.எல்.,**

நீதித்துறை நடுவர், திருவையாறு **)**